செ.வெ.எண்: 178 நாள்: 18.03.2021

**வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு.**

-----------------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பாதுகாப்பு அறையினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.03.2021) திடீர் ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

சட்டமன்ற தேர்தலையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில் மொத்தம் 1,902 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வழங்கும் வகையில் கணினியின் மூலம் முதல்கட்ட சுழற்சி முறையில் சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் பிரித்து வழங்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் 10.03.2021 அன்று நடைபெற்றது. இதில் வாக்குப்பதிவு இயந்திரத்தின் 3,401 பேலட் யூனிட், 2,331 கன்ட்ரோல் யூனிட், 2,482 விவிபேட் இயந்திரங்களும் முதல்கட்ட சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட தொகுதிக்குட்பட்ட கந்தர்வக்கோட்டை, இலுப்பூர், புதுக்கோட்டை, திருமயம் மற்றும் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகங்களிலும், அறந்தாங்கி சார் ஆட்சியர் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறையில் CCTV கண்காணிப்பு கேமரா, 24 மணிநேரமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள், தீயணைப்பான்கள், கண்காணிப்பு பதிவேடுகள் உள்ளிட்ட பல்வேறு உயர் பாதுகாப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதுடன், இவ்அறைகள் இரண்டு அடுக்கு பாதுகாப்பு முறையில் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது இதுபோன்ற திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு மின்னணு இயந்திர பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜிசரவணன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**